RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2414

OPEN ACCESS

# கலைஞரின் சிறுகதைகளில் “பெண்”

கே.இரா. கமலா முருகன் [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி), சென்னை-600004, தமிழ்நாடு, இந்தியா.

# Woman in the Kalaingnar’s short stories

**K.R. Kamalamurugan [a, *]**

[a] Department of Tamil, Queen Mary's College (Autonomous), Chennai-600004, Tamil Nadu, India

* Corresponding Author: kamalamuruganhari@gmail.com

Received: 09-11-2023
Revised: 23-12-2023
Accepted: 10-01-2024
Published: 20-01-2024

Check for updates

**ABSTRACT**

The purpose of the creation of the human race in the world as male and female is that the nature of the two is different, but their view us same. The great writers Periyar and Anna lived with social concern and whenever they got political opportunities, they did things for the benefit of women, and writer Kalaingnar in his literary writings, pointed out the life circumstances of women and arranged their thoughts, words, and actions in order to contribute to their welfare. This article highlights some views related to women recorded in Kalaingnar's short stories.

**Keywords:** Women, Kalaingnar, Short Stories, Social Concern, Periyar

## முன்னுரை

‘ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாய் வாழ்வோம்’ இந்த நாட்டிலே என்று மேடை முழுதும் முழங்கினாலும் பெண்மையே தெய்வம், தாய்மையே உயர்வு என்று உலகம் பேசித்திரிந்தாலும் உண்மையில் பெண்மையின் நிலைப்பாடு, பெண்ணுரிமை, பெண்ணியம் எல்லாம் ஓங்கியதாகக் கூறும் இந்நாட்களிலும் இன்னும் பல்வேறு நிலைகளில் மாறுபட்டே கிடக்கின்றன என்கிற பலதரப்பட்ட சூழல்களை மாபெரும் படைப்பாளுமையாக சமீப காலத்தில் வாழ்ந்து மறைந்து நூற்றாண்டைக் கொண்டாடும் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் சிறுகதைகளில் காணப்படும் பெண் தொடர்பான சிந்தனைகளை எடுத்துரைப்பதாக இவ்ஆய்வு அமைகிறது.

உலகிலேயே ஆண் பெண் என்று இரு கூறாக மனித இனம் படைக்கப்பட்டதன் நோக்கம், இரண்டின் தன்மையும் வேறுவேறு எனினும் இரு பார்வை ஒரு காட்சி என்பதாக அமைய வேண்டும் என்பதே ஆகும்.

ஆயினும், காலம் காலமாக இலக்கியமும் இயற்கையும் படைப்பாளர்களும் பல இடங்களில் பெண்மையினை உயர்த்தி,

“மங்கையராய்ப் பிறப்பதற்கே
நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா
அவர் பங்கயக் கைநலம் பார்த்தலவோ
இந்தப் பாரினில் அறங்கள் வளருதம்மா”

என்று போற்றுகின்ற கவிமணியின் அடிகள் உட்பட பெரும்பான்மை இத்தகைய உயர்நலன்களையே பேசுகின்றன (Kavimani Desigavinayagam Pillai, 2018).

எனினும், உண்மை என்ன 'பாவேந்தர்' கூறும் "மண்ணுக்கும் கேடாய் நினைத்தீரா பெண்ணினத்தை" என்ற நிலைப்பாடே ஆகும். இதனைப் பல படைப்பாளர்கள் பதிவு செய்துள்ளனர் (Bharathidasan, 2017).

அவ்வகையில் பெரியார், அண்ணா என்ற பெரும் சிந்தனையாளர்கள் பாசறையில் தம்மை இணைத்து வளர்த்துக் கொண்டு சமுதாய அக்கறையுடன் வாழ்ந்து தனக்கான அரசியல் வாய்ப்புகள் கிடைத்த போதெல்லாம் பெண்மை நலன் கூடும் செயல்கள் செய்தும், தமது இலக்கியப் பதிவுகளில் பெண்மையின் வாழ்வியல் சூழல்களைச் சுட்டிக்காட்டி எடுத்துரைத்து அவர்களது நலம் கூட்டும் வகையில் தமது சிந்தனை, சொல், செயல் யாவினையும் அமைத்துக் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞரின் இலக்கியப் படைப்புகளுள் சிறுகதைகளில் பதிவு செய்துள்ள சில பெண் தொடர்பான பார்வைகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## அதிகார ஆண் வர்க்கம்

கவிக்கோ அவர்கள் தம் கவிதை ஒன்றில்,

"காலைத் தூக்கி நின்றாடி

உன்னை ஜெயித்த

வெட்கம் கெட்ட வரலாறு

எங்களுடையது"

என்று பதிவு செய்திருப்பார் (Abdul Rahman, 1995). காரணம் ஆண், பெண் என்று இரண்டாய் இரண்டும் உயிரில் ஒன்றாய் படைக்கப்பட்டிருப்பினும் பல்வேறு நிலைகளில் ஆண்கள் பெண்களை இழிவாகவும், போகப் பொருளாகவும், அடிமைகளாகவும் நடத்துவதனையே நாம் காணமுடிகின்றது. இத்தகைய அவலங்கள் சிலவற்றையும் தமது சிறுகதைகளில் பதிவு செய்துள்ளார் கலைஞர் அவர்கள்.

அதிகாரம் கொண்டவர்கள் பொருளாதார பலம் கொண்டவர்கள் என்ற பலதரப்பட்ட நிலையில் ஆடவர்கள் இங்கு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகின்றனர் கலைஞரது பார்வையில்,

"தப்பி விட்டார்கள்" என்னும் சிறுகதையினை செல்வந்தர்கள் பல்வகையான கொடுமைகளைச் செய்வதனை எடுத்துக்காட்டும் வகையில் அமைத்துள்ளார் (Karunanidhi, 2017). செல்வந்தராகிய கிராமதுரை நல்லவர் என்றும், வள்ளல் என்றும், புண்ணியவான் என்றும் பெயர் பெற்றவர். ஆனால் தனது ஆலையில் வேலையில் செய்யும் விட்டல் என்பவனின் மனைவி தங்கத்தினைக் கற்பழித்துவிடுகின்றார். அவ்வாறே 'பிரேத விசாரணை' என்ற சிறுகதையும் அதே தாய்மையின் உயர்வும் சமுதாயக் கருத்தமைவுடன் வெளியில் நல்லவனாக நடிக்கும் தருமதுரை வாய்ப்பு கிடைத்தபோது அபலை ஏழைப் பெண்ணாகிய கருப்பாயினை கற்பழித்து கொலை மிரட்டல் செய்து ஊரை விட்டே ஓடச் செய்யும் கொடுமையினை செய்யும் சூழலைக் காட்டுகின்றார். முத்துவின் மனைவியின் நிலைமை மரணத்தில் முடிகிறது (Karunanidhi, 2017).

## பொருந்தா மணம்

'வரதட்சணை எனும் பாவி' என்ற சொல் உண்மை. காரணம் பொருளாதாரத்தில் கடைநிலைக்கும் இடைநிலைக்கும் தள்ளப்பட்ட பல குடும்பங்களில் இந்த சிக்கல் தலைவிரித்தாடுகின்றது. இது திருமணத்திற்கு முன், பின் என இருநிலையிலும் அமைகின்றது.

பெற்றோரின் பொறுப்பற்ற சூழல்கள், ஆடவர்களின் அதிகாரப் போக்கு, வறுமை என்ற பல காரணங்களால் வயதில் மூத்த ஆடவர்கள் இல்லையில்லை....... முதுமை நிலையின அடைந்த

ஆடவர்களை இளம்பெண்கள் திருமணம் செய்ய வேண்டிய அவலம் இந்தச் சமுதாயத்தில் மிகுதியாக உள்ளது. இந்தச் சிக்கலை உணர்ந்த கலைஞர் அவர்கள் தம் சிறுகதைகள் சிலவற்றில் இச்சிக்கலை மையப்படுத்திப் படைத்துள்ளதனைக் காண முடிகின்றது. “கங்கையின் காதல்” என்ற சிறுகதையில் ‘கிழவனுக்குப் பெண் கொடுக்காதே, இதைச் சொல்வாயா என்றும், “எங்கைளைப் போன்ற தாரையும் கங்கையும் தள்ளாத கிழவன்களுக்கு வந்து சேர்ந்தால் உன்னைப் போலச் சந்திரர்களுக்கு நல்ல வேட்டைதான்” என்றும் கங்கை பேசும் உரையாடல்களை அமைத்துப் பொருந்தா மணத்தின் அவலத்தைப் பதிவு செய்துள்ளார் (Karunanidhi, 2017).

## தாய்மையின் உயர்வும் சமுதாய நலமும்

“எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே“ என்ற பாடல் வரிகள் அனைவரும் கேட்ட மொழிதான். பெண்மையை சிலர் போற்றுகின்றனர். காரணம் அதன் தாய்மை தூய்மை, கடமை, தியாகம்! என்று பலவற்றைச் சுட்டுகின்றார்.

அவ்வகையில் நல்ல அன்பினாலும் பண்பினாலும் தன் குடும்பத்தையும் குழந்தைகளையும் மட்டுமின்றி சமுதாயத்தையும் சீர் செய்யும் ஆற்றலுடைய பெண்களும் இங்கு உள்ளனர் என்பதான உயர்நெறியினையும் தமது சிறுகதைகளில் பதிவு செய்துள்ளார் முத்தமிழறிஞர் அவர்கள்.

அவ்வகையில் “காந்தி தேசம்” என்ற சிறுகதையில் ‘விலை மாதுகளுடன் நண்பன் கோபி கிருஷ்ணனைப் பார்த்து அதிரும் காந்திதாசன் தாயின் உதவியுடன் விபச்சாரத்தில் உள்ள பெண்களைத் திருத்தும் பணியினை செய்வதைப் பதிவு செய்து மற்றவர்களையும் தன்னுடைய செயலாலும் தாயின் செயலும் திருத்த முடியும் என்பதனைப் பதிவு செய்யும் வகையில் காட்சியினைப் பதிவு செய்துள்ளார் (Karunanidhi, 2017).

“நண்பன் கோபி கிருஷ்ணாவைப் பார்த்து அதிர்ந்தேவிட்டான். அதற்கு மேல் அவனால் எதுவும் பேச முடியாமல் விம்மி அழுகிறான். பின்பு அந்தப் பெண்ணுக்குப் பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு நண்பனை அழைத்துக் கொண்டு மெரீனா பீச்சுக்குச் சென்றான். அங்கு நண்பனிடம் விபச்சாரத்திலே ஈடுபடுகின்ற ஆண், பெண்களைத் திருத்தி நல்ல வேலை தந்து ஒழுக்கமான முறையிலே வாழ வைக்கிறேன். இதுதான் என் வேலை. இதற்கெல்லாம் என் அம்மா பம்பாய் பேங்க் ஒன்றில் வேலை செய்து மாதம், மாதம் பணம் அனுப்புகிறார்கள். சாக்கடையிலே விழப்போற பெண்களைக் காப்பாற்றுகிறேன். உனக்கு அப்பா சின்ன வயசிலேயே இறந்துவிட்டார்களே என்கிறான். அவன் நண்பன் கவர்மெண்டா பணம் தருது. இதுக்குப் போய் உன் அம்மா பணம் அனுப்புகிறார்களா? என்று கேட்க, அவன் அம்மா என் கொள்கையை ஏத்துக்கிட்டு என்னை ஊக்கப்படுத்தி அடிக்கடி கடிதம் கூட எழுதுவாங்க என்று தன் சட்டைப் பையிலிருந்து கடிதம் ஒன்றை எடுத்துப் படிக்கிறான்“.

“நான் இந்த மாதம் உனக்கு அனுப்பி உள்ள பணத்தையும் நீ ஏற்றுக் கொண்டுள்ள புனிதமான திட்டம் நிறைவேறுவதற்குச் செலவழிப்பாய் என்று நம்புகிறேன். மனிதச் சந்தையில் வாடகைக்கு உடலை விடும் பெண்களையும், அந்தச் சொற்ப நேர சுகத்தைச் சொர்க்கலோக சுகம் என்று எண்ணிச் சீரழியும் ஆண் வர்க்கத்தையும் முழுமையாகச் சீர்திருத்தி ஒழுக்கமுள்ள ஒரு சமுதாயத்தைக் காணமுடியும் என்ற பூரணமான நம்பிக்கை இல்லை என்றாலும் கூட அழுக்காகிவிட்ட குளத்திலிருந்து ஒரு குடம் நீரைக் கொதிக்கக் காய்ச்சிவிட்டால் அந்த ஒரு குடம் நீராவது தூய்மையாகிவிடுகிறது அல்லவா? அத்தகைய தூய்மைப் பணியைத் தோள் மீது போட்டுக் கொண்டு தொண்டாற்றுகின்றபோது பின் மனம் அன்றலர்ந்த செந்தாமரை ஆகிறது கண்ணா? கடிதத்தைப் படித்து முடித்துவிட்டுக் காந்திதாசன் கோபி கிருஷ்ணாவை லேசான புன்னகையுடன் பார்த்தான் காந்தி! நீ என்னைத் தடுத்து நிறுத்தி உபதேசம் பண்ணியதை விட உன் அம்மாம எழுதியிருக்கிற ஒவ்வொரு எழுத்தும் என் தலையில் சம்மட்டியால் அடிக்கிற மாதிரி முன்னாலேயே உங்க அம்மா சத்தியமா உறுதி எடுத்துக்குவோம்.

"நம் ரெண்டு பேரும் வாழ்க்கையிலே சந்தர்ப்ப வசத்தாலே வழுக்கி விழுந்த பெண்களையே கல்யாணம் பண்ணிக்கிறதுங்கிற உறுதி! இருவரும் கைகளை அழுத்திப் பிடித்துக் குலுக்கிக் கொண்டார்கள்".

என்று கதை தொடர்ந்து செல்லும்போது அடுத்து அவனது அந்தத்தாய் இறப்பதும், அவள் எத்தகைய தொழிலில் ஈடுபட்டாள் என்பதும், தன்னைப் போல வேறு எந்தப் பெண்ணும் பாதிக்கப்படக் கூடாது என்பதான எண்ணமும் இக்கதையில் பதிவாகின்றது.

இங்கு தாய்மையும் போற்றப்படுகிறது. விலைமகள்கள் என்ற நிலை மாற வேண்டும் என்ற அக்கறையும் பேசப்படுகின்றது. அய்யோ ராஜா கதையின் முத்தம்மாளின் நிலையும் இதே மாதிரிதான்.

கவிஞர் சிற்பி அவர்கள்,

"அம்மா நகைகளை விற்றாள்

அப்புறம் காய்கறி விற்றாள்

தலையில் சுமந்து விறகு விற்றாள்

பிறகு

கற்பை விற்றாள்

எங்களுக்குக்

கால்வயிறு நிரம்பியது"

என்று மௌன மயக்கங்கள் நூலில் பேசுவது போன்று பல பெண்கள் தள்ளப்படுகிறார்கள். ஆனாலும் தாய்மை காக்கப்படுகிறது என்பதனையும் உணர வேண்டும்.

"தாய்மை" ஒரு சரித்திரச் சிறுகதையாக அமைகிறது (Karunanidhi, 2017).

## தொன்மைப் பெண்களுக்கான மாற்றுப் பார்வைகள்

புராணங்கள், இதிகாசங்களில் பல்வேறு பெண்களின் சூழல்கள் அவர்களுக்கே எதிரான நிலையில் பல நேரங்களில் படைக்கப்பட்டுள்ளன. அத்தகைய சில சூழல்களைத் தமது கதைகளில் கொண்டு வந்து,

"நளாயினி" என்ற கதையில் குஷ்ட நோய்க்கு ஆளான கணவனை விலைமகளின் வீட்டுக்குக் கூடையில் தூக்கிச் செல்லும் நளாயினியின் செயலுக்கான மன உணர்வினைப் 'பெருநோய் பிடித்த கணவனுடன் கூடக் கிடக்க விருப்பமில்லை, தொட்டுத் தூக்கிட மனமின்றி கூடையில் தூக்கினேன்' என்றும் பேசுவது பெண்மன உணர்வில் காணும் வேறு நிலையாகும். "வாழ முடியாதவர்கள்" என்ற சிறுகதையில் பிரம்மா தான் படைத்த திலோத்தமையினையே தேடி விரட்டுவது என்ற அவலச் சூழலைச் சுட்டுகின்றது (Karunanidhi, 2017).

"சித்தார்த்தன் சிலை" என்ற சிறுகதையில் ஆசையே அழிவிற்குக் காரணம் என்று வீட்டைவிட்டுச் சென்ற பின் மனைவியின் நிலை உணர்ந்து திரும்பவும் வந்து சேர்ந்ததை புத்தர் சிலையின் பின் மறைந்து இருப்பது அவளது கணவன் என்பதாகப் பதிவு செய்து புதுமை செய்கிறார்.

## பகுத்தறிவுப் பெண்கள்

"ஆட்டக்காவடி" கதையின் நாயகி கனிமொழி பகுத்தறிவு சிந்தனையாளராகப் பதிவு செய்துள்ளார். "பிரேத விசாரணை" யும் இவ்வாறான முறையில் சாதிய சிந்தனையைப் பேசுகிறது. சட்டங்கள் செய்வதும் பட்டங்கள் ஆள்வதும் பெண்கள் ஏற்றாலும் பகுத்தறிவு பேசும் பெண்கள் எங்கோ

ஒரு மூலையில்தான் இருப்பார்கள். அவர்களும் அதனைத் தம் வாழ்வில் பின்பற்ற இயலுமா என்பதும் மிகப் பெரிய கேள்வியே ஆகும் (Karunanidhi, 2017).

## முடிவுரை

'பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் மிகப் பிழை இருக்குதடி தங்கமே' என்பதுதான் பெரும்பான்மை பெண்மையின் வாழ்நிலை. எத்தனை பட்டங்களும் சட்டங்களும் கூடி நின்றாலும் பெண்மையைத் தூற்றும் பெண்மையை அடிமையாக்கும் செயல்களில் மாற்றம் வர காலங்கள் பலவற்றைக் கடக்க வேண்டும். காலம் கடந்த தலைவராக வரலாறாக, மனிதநேயம் கடந்த மாமனிதராக வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்தம் படைப்புலகில் சிறுகதைகள் என்பது ஒரு பகுதியாக இருக்கலாம். அதில் பெண் பாத்திரங்கள் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால் பெரும்பான்மைப் பெண்களின் மாறாத விதியாக பல்வேறு இடர்ப்பாடுகள் தொடர்வதனையே பெரும்பாலும் அவர்தம் படைப்புகள் பேசுகின்றன. இவற்றைப் படித்தால் போதாது, உணர்ந்து தெளிந்து சமுதாயம் மாற வேண்டும். பெண்மை ஓங்க வேண்டும்!

## References

Abdul Rahman, (1995) Aalabanai, Kaviko Pathippagam, Chennai, India.

Bharathidasan, (2017) Sanjeevi Parvathathin Saral, Saradha Pathippagam, Chennai, India.

Karunanidhi, M. (2017) Kalaignarin Sirukathai Poonga, Seethai Pathippagam, Chennai, India.

Kavimani Desigavinayagam Pillai, (2018) Malarum Malaiyum, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License